## கேள்வி:

# " 'புதிய உடன்படிக்கை' தீர்க்கதரிசனத்தின் தனிச்சிறப்பு என்ன?"

## பதில்:

*கிறிஸ்துவின் சபையை முன்குறித்த பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்களை நாம் கவனிக்கையில், "புதிய உடன் படிக்கை" பற்றிய தீர்க்கதரிசனத்தை விசேஷமாய் கவனிக்க ஒருவர் விரும்பக்கூடும். மோசேயின் பழைய உடன்படிக் கைக்கும், கிறிஸ்துவின் புதிய உடன்படிக்கைக்கும் அநேக முரண்பாடுகள் உள்ளன. இரண்டையும் ஏற்படுத்தினவர் ஒரே தேவன்தான், இருப்பினும் புதிய உடன்படிக்கை பழைய உடன்படிக்கையிலிருந்து வளர்ச்சி பெற்றதாயுள்ளது.*

*சீனாய் மலையில் மோசேயின் உடன்படிக்கை தொடங்கி (கி.மு. 1446), சுமார் தொள்ளாயிரம் ஆண்டுகளுக்குப் பின்பு (கி.மு. 597) அது சிலுவையிலறையப்படுவதற்கு 600 ஆண்டு களுக்கு முன்பு (கொலோ. 2:14), தேவன் தமது மக்களுக்குப் புதிய உடன்படிக்கையை வாக்குத்தத்தம் செய்தார். ஆனதோத் தின் ஆசாரியனாகிய எரேமியாவுக்கு, புரட்சிகரமான, முன்னு ரைக்கும் செய்தியைத் தரும் கட்டளையை அவர் கொடுத்தார்.*

> *"இதோ,நாட்கள் வரும், ... அப்பொழுது இஸ்ரவேல் குடும்பத்தாரோடும் யூதா குடும்பத்தோடும் புது உடன் படிக்கை பண்ணுவேன். நான் அவர்கள் பிதாக்களை எகிப்து தேசத்திலிருந்து அழைத்து வரக் கைப்பிடித்த நாளிலே அவர்களோடே பண்ணின உடன்படிக்கையின்படி அல்ல; ஏனெனில் நான் அவர்களுக்கு நாயகராயிருந்தும், அந்த என் உடன்படிக்கையை அவர்கள் மீறி அவமாக்கிப் போட்டார்களே, ... அந்நாட்களுக்குப் பிற்பாடு நான் இஸ்ர வேல் குடும்பத்தோடே பண்ணப்போகிற உடன்படிக்கை யாவது; நான் என் நியாயப்பிரமாணத்தை அவர்கள் உள்ளத்திலே வைத்து, அதை அவர்கள் இருதயத்திலே எழுதி,*

*நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமா யிருப்பார்கள், ... இனி ஒருவன் தன் அயலானையும், ஒருவன் தன் சகோதரனையும் நோக்கி: 'கர்த்தரை அறிந்து கொள்' என்று போதிப்பதில்லை; அவர்களின் சிறியவன் முதல் பெரியவன் மட்டும் எல்லாரும் என்னை அறிந்து கொள்வார்கள், ... நான் அவர்கள் அக்கிரமத்தை மன்னித்து, அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பேன்" (எரே. 31:31-34).*

*புதிய பிரமாணம்[1] அல்லது உடன்படிக்கையில் நான்கு வித புதிய பண்புகள் இருக்க வேண்டும்: (1) அது இருதயத்தில் எழுதப்படுவது (வ. 33ஆ), (2) தேவனுக்கும் அவரது மக்களுக் கும் தனிப்பட்ட உறவினை அது ஏற்படுத்தும் (வ. 33இ), (3) அது கர்த்தரை அறிந்த ஜனங்களோடு மட்டும் ஏற்படுத்தப் படும் (வ. 34அ) மற்றும், (4) அது பாவங்களுக்கு முழுமையான மன்னிப்பை அறிவிக்கும் (வ. 34இ).*

## இருதயத்தில் எழுதப்பட்ட உடன்படிக்கை

*பழைய உடன்படிக்கையானது எகிப்தியக் காகிதத்தில் (பாப்பிரஸ் தண்டில்) மற்றும் இரண்டு கற்பலகைகளில் எழுதப்பட்டது (யாத். 24:4-7, 12; 34:28). இதற்கு முரண்பட்ட வகையில், புதிய உடன்படிக்கையானது மக்களின் இருதயங் களில் எழுதப்பட்டது. பழைய உடன்படிக்கையானது புறம் பாக எழுதப்பட்டது, ஆனால் புதியது அகத்தில் எழுத வேண்டியதாயிருந்தது. முதலாவதானது வெளிப்புறத்திலும், இரண்டாவதானது "உட்புறத்திலும்" எழுத வேண்டிய தாயிருந்தது. முதலாவதானது சரீரப் பிரகாரமானது, இரண்டாவதானது ஆவிக்குரியது. முதலாவதானது காணக் கூடியது, இரண்டாவதானது காணப்படாதது.*

*ஒருவருடைய இருதயத்தில் எழுதுவது எப்படி என்பதை, எண்ணமற்று காரோட்டும் ஒருவர் மணிக்கு முப்பத்தைந்து மைல் வேகத்தில் பள்ளி எல்லையில் ஓட்டுவதைக் கொண்டு விளக்கலாம். திடீரென்று, நிறுத்தப்பட்டுள்ள இரு கார்களின் நடுவினின்று ஒரு சிறு பையன் தெருவுக்கு ஓடி வருகிறான். காரோட்டுபவர் உடனே பிரேக் போட்டு காரை நுணுக்கமாகத் திசை மாற்றுகிறார். அவர் காரை நிறுத்தும்போது அது அந்தப் பையனை உரசி நிற்கிறது! காரோட்டுபவருக்கு உடனே வியர்த்து விடுகிறது. அந்தப் பையனைக் கொல்லுமளவுக்கு*

அவர் எவ்வளவு நெருங்கியிருந்தார்! அதற்குப்பின்பு அவருக்கு, "பள்ளிப்பகுதி - மணிக்குப் பதினைந்து மைல் வேகம் மட்டும்" என்று அறிவிக்கும் வெளியான அறிவிப்புப் பலகை தேவையா யிருக்காது. அந்த நாளுக்குப் பின்பு அந்தத் தெருவில் மெது வாகவும், ஜாக்கிரதையாகவும் காரை ஓட்ட வேண்டும் என்ற விஷயம் அவரது இருதயத்தில் எழுதப்பட்டுவிடும்.

**"புதிய ஏற்பாடு" புது உடன்படிக்கையல்ல**

"நமது கர்த்தரும் இரட்சகருமானவருடைய புதிய ஏற்பாடு" என்ற தலைப்பின் கீழ் இருபத்தியேழு புத்தகங்களையும் அச்சிட்ட நூலில் ஒன்றாகப் பார்க்கும் ஒருவர் அதைப் புதிய உடன்படிக்கை என்று தவறாக எண்ணக் கூடும். இருபத்தியேழு புத்தகங்களும் விலைமதிப்பற்றவைதான், ஆனால் அவை யாவும் புதிய ஏற்பாடு அல்லது உடன்படிக்கை ஆகிவிடாது. அவைகளின்றி ஒருவர் புதிய உடன்படிக்கையை அறிய முடியாதுதான். ஆனாலும் அவைகள் தன்னிலே புதிய உடன்படிக்கையாகி விடாது. புதிய ஏற்பாடு ஆரம்பமான, இயேசு உயிர்த்த பின்பு வந்த முதல் பெந்தெகொஸ்தே நாளன்று, ஒரு புத்தகம் அல்லது ஜனங்களின் மீது பழைய உடன்படிக்கையின் ஆரம்பத்தின் போது நடந்தது போல இரத்தம் தெளிக்கப்படவில்லை (எபி. 9:19, 20ல் காண்க).

**பெந்தெகொஸ்தேயின் புதிய ஏற்பாடு**

சீனாய் மலையின் மீது சுத்தமாக்கப்பட்ட தளத்தின் மேல் எழுதப்பட்டதற்கு முரணான வகையில், பெந்தெகொஸ்தே யன்று, எருசலேமின் சீயோன் மலையில் பரிசுத்தமாக்கப்பட்ட இருதயங்களின்மேல் எழுதப்பட்டது. பேதுருவின் வாயி லிருந்து புறப்பட்ட (அப். 2:4, 14, 22) ஆவியானவரால் ஏவப் பட்ட வார்த்தைகள் கேட்கப்பட்டு, சந்தோஷமாய் ஏற்றுக் கொள்ளப்பட்டன (அப். 2:37, 41). அந்த நாளில் மூவாயிரம் பேருடைய இருதயங்களில் அவை எழுதப்பட்டன. இயேசுவின் கர்த்தத்துவம் மற்றும் அவருக்கு ஊழியம் செய்யும் உறுதிப்பாடு ஆகியவை அன்று எழுதப்பட்டன. அவர்கள் ஞானஸ்நானம் பெற்றபோது, புதிய உடன்படிக்கைக்கு அவர்களை நடத்திச் செல்வதற்கு அவர்களது சரீரங்களின் மேல் மிருக இரத்தம் தெளிக்கப்படவில்லை, ஆனால் அவர்களின் இருதயங்களில் ஆவிக்குரிய வகையில் இயேசுவின் இரத்தம்

தெளிக்கப்பட்டது (எபி. 10:22; 12:24; 1 பேது. 1:2). அந்த மூவாயிரம் பேர் - வெளிப்படையாக எழுதப்பட்ட எழுத்துகளை அல்ல, ஆனால் பேதுரு அறிவித்த செய்தியை ஏற்றுக் கொண்டனர். அந்தச் செய்தியை அவர்கள் தங்கள் இருதயங்களில் எடுத்துக் கொண்டனர். அது இந்த இருபத்தியேழு புத்தகங்களில் முதல் புத்தகம் எழுதுவதற்கு குறைந்த பட்சம் பதினைந்து ஆண்டுகள் முன்னதான காலமாகவும், அல்லது கடைசி புத்தகம் எழுதப்படுவதற்கு அறுபத்தாறு ஆண்டுகள் முன்னதான காலமாகவும் இருந்தது (வெளி. கி.பி. 96). இருப்பினும் அந்த மூவாயிரம் பேர் தங்கள் இருதயத்துள்ளாக எழுதின அனுபவம் பெற்றனர்.

உண்மையில், அன்றைய நாளில் மூவாயிரம் உடன்படிக்கைகள் ஏற்படுத்தப்பட்டன. பேதுருவின் அறிவுரையை ஏற்று அதற்குப் பதில்செயல் புரிந்த அனைவரும் இயேசுவுடன் ஒரு ஒப்பந்தம், உடன்படிக்கையில் பிரவேசித்தனர். ஒவ்வொருவரும், கிறிஸ்துவைத் தங்கள் கர்த்தரென்று ஏற்றுப் பின்பற்றுவதாக உறுதி செய்தனர், மற்ற பலர் அல்லது மற்ற சிலர் செய்தார்கள் என்பதற்காக அன்றி தாங்களாகவே இதைச் செய்தனர். மற்றவர்கள் செய்தார்கள் என்பதற்காக எவரொருவரும் கீழ்ப்படியவில்லை; மாறாக, இயேசு இருதயத்தில் அதை எழுதியதால் ஒவ்வொருவரும் பதில்செயல் செய்தனர். இந்தக் கண்ணோட்டத்தில், அந்த நாளில் மூவாயிரம் தனி நபர்கள், சொந்த உடன்படிக்கைகள் அல்லது ஒப்பந்தங்கள் சமர்ப்பித்தனர். அவைகள் ஒவ்வொன்றும் மற்ற எல்லாவற்றிலுமிருந்து தனிப்பட்டதாய், சுயாதீனமுடையதாயிருந்தும், அந்த மூவாயிரம் உடன்படிக்கைகளும் ஒரே விதமான உடன்படிக்கையாகவே இருந்தன.

**மையினால் அல்ல**

இருபத்தியேழு புத்தங்களின் தொகுப்பு முகத்தில், "நமது கர்த்தரும் இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் புதிய ஏற்பாடு" என்பதைப் பரிசுத்த ஆவியானவர் எழுதவில்லை. அச்சகத்தார் அவ்விதம் தவறாக அச்சிட்டு விட்டனர். இரு உடன்படிக்கைகளும் எழுதப்பட்ட இடங்களுக்கிடையே முக்கிய வேறுபாடு இருந்ததை அவர் அடையாளம் கண்டு கொள்ளவில்லை. முதலாவது உடன்படிக்கையானது ஒரு புத்தகத்தில் வெளிப்படையாகவும், இரண்டாவது உடன்

படிக்கையானது இருதயத்தில் உள்ளாகவும் எழுதிய தேவசிந்தையை அவர் அறியாமையினாலே மங்கச் செய்து விட்டார். அந்த அச்சகத்தாரின் வார்த்தைகள் பழைய ஏற்பாட்டின் முப்பத்தொன்பது புத்தங்களும், புதிய ஏற்பாட்டின் இருபத்தேழு புத்தங்களுக்கும் எதிரான மற்றும் இணையானவை என்று ஜனங்களை எண்ண வைத்து தவறாக வழிநடத்தக் கூடும்.

அச்சகத்தாரின் அந்த வார்த்தைகள் 2 கொரிந்தியர் 3:3ன் படி முரண்பட்டதாகின்றது: "... அது மையினாலல்ல, ஜீவனுள்ள தேவனுடைய ஆவியினாலும்; கற்பலகைகளிலல்ல, இருதயங்களாகிய சதையான பலகைகளிலேயும் எழுதப்பட்டிருக்கிறது," இருபத்தியேழு புத்தங்களைக் கொண்ட தோலினால் கட்டப்பட்ட தொகுதியானது மையினால் எழுதப்பட்டுள்ளது. அது இப்பொழுதுள்ளவைகளிலேயே மிக முக்கியமான தொகுதியாயிருப்பினும், அது இல்லாமல் இரட்சிப்பு என்பது இயலாததாய் இருப்பினும் (யோவா. 6:63), அது புதிய ஏற்பாடு அல்ல. புதிய ஏற்பாடு மையினால் எழுதப்பட்டதல்ல, ஆனால் ஆவியானவரால் எழுதப்பட்டது. பெந்தெகொஸ்தே நாளன்று, ஆவியானவர், பேதுருவின் வார்த்தைகளைக் கொண்டு சதைப் பலகைகளில் - இருதயங்களில் எழுதினார். இன்றைய நாட்களில், பேதுரு எழுதிய வார்த்தைகளின் மூலம் ஆவியானவர் அதே பணியைத்தான் செய்கிறார் (அப். 2ல் லூக்காவால் பதிவு செய்யப்பட்டது).

பரிசுத்த ஆவியானவர், இருபத்தேழு புத்தகங்களும் மையினால் காகிதத்தில் எழுதப்படக் காரணரானார், ஆனால் அவைகள் புதிய உடன்படிக்கையல்ல. அந்த இருபத்தேழு புத்தகங்களிலும் உள்ள செய்தியை படித்து, ஏற்கப்பட்டு, அதன்படி செய்யப்படும்பொழுது மட்டுமே உடன்படிக்கையானது அமுலுக்கு வந்தது என்று சொல்லப்பட முடியும். அந்த இருபத்தேழு புத்தங்களிலும் உள்ள செய்தியானது படித்து, ஏற்கப்பட்டு, அதன்படி செயல்படும்போது பரிசுத்த ஆவியானவர் அதை இருதயங்களாகிய சதைப்பலகைகளில் எழுதியிருக்கிறார் என்று சொல்ல முடியும்.

நாகரீகமான ஒரு திருமணத்தின் போது, மணப்பெண் வெண்மையான தோல் அட்டையிட்ட, அழகான வேதாகமம் ஒன்றைக் கையிலேந்தி வருவதைக் கண்டு பார்வையாளர்கள் உணர்ச்சி வசப்படுகிறார்கள். பிறகு புகைப்படமெடுப்பவர்

மணமகனும் மணமகளும் அந்த வேதாகமத்தை தங்கள் இணைந்த கரங்களில் பற்றியிருக்கப் புகைப்படமெடுக்கிறார். அந்தத் தம்பதிகள் "இந்த வேதாகமம் எங்கள் குடும்பத்தின் அஸ்திபாரமாகும்" என்று கூறுவதை இது அர்த்தப்படுத்துவது தெளிவாகும். ஆயினும் மையினால் எழுதப்பட்டு, தோலினால் கட்டப்பட்ட அந்த புத்தகத்தை காட்டிலும் மேலானதொன்று அங்கு தேவை. அந்தப் புத்தகத்தில் எழுதியிருந்தது அவர்கள் இருதயங்களில் எழுதப்படவில்லை. அந்த வேதாகமத்தை அவர்கள் தங்கள் தேனிலவின் போது எடுத்துச் சென்றனர். ஆனால் அதை அவர்கள் படிக்கவில்லை. அவர்கள் இல்லத்தில், அந்த வேதாகமம் வரவேற்பறையில் கவனத்தை ஈர்க்கும் ஓரிடத்தில் வைக்கப்பட்டது, ஆனால் அது திறக்கப்படவில்லை. குடும்ப ஜெபமோ, வசனங்களை வாசிப்பதோ அந்தக் குடும்பத்தின் பண்புகளாய்க் காணப்படவில்லை. சில மாதங் களுக்குப் பிறகு, அந்த இளைஞன் வேறொரு பெண்ணால் மயக்கப்பட, அவன் மனைவி விவாகரத்து வழக்குத் தொடுத் தாள். அவள் இன்னும் அந்த வேதாகமத்தை தனது நினைவுப் பொருட்களுடன் வைத்திருந்தாள், ஆனால் அது அவளுக்கு சந்தோஷத்திற்குப் பதிலாகக் கண்ணீரை வரவழைத்தது. வேதாகமத்தில் உள்ளவைகள் இருதயத்தில் எழுதப்படாத வரையில், அது பலனற்றதாகிறது. எழுதப்பட்ட தேவனுடைய வார்த்தையானது நேர்மையான மற்றும் நல்ல இருதயங்களுக்கு மட்டுமே ஜீவனுள்ளதாகவும், ஊக்கமூட்டுவதாகவும் உள்ளது (எபி. 4:12; லூக். 8:15).

## தனிப்பட்ட ஒரு உறவு

பழைய மற்றும் புதிய உடன்படிக்கைகளுக்கிடையேயுள்ள முதலாவது வேறுபாடு, அவைகள் எங்கு எழுதப்பட்டன என்பதாகும். இரண்டாவது வித்தியாசம் தேவனுக்கும் அவரது உடன்படிக்கையின் ஜனங்களுக்கும் நிலவிய உறவின் தன்மையில் உள்ளதாகும்: "நான் அவர்கள் தேவனா யிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள்'' (எரே. 31:33இ). படைப்பின் தொடக்கத்திலிருந்தே, பரலோகத் தின் பிதாவானவர் தமக்கும், தமது சாயலில் படைக்கப் பட்டவர்களுக்கும் இடையில் தனிப்பட்ட தோழமை இருக்க வேண்டும் என்று எப்பொழுதும் விரும்பினார். ஏதேனில் இதை

அவர் விரும்பினார், மனிதனின் பாவம் அதைச் சாத்திய மற்றதாக்கும் வரையிலும் அதைத் தொடர்ந்து செயல்படுத்தினார். அதன் பிறகு, வெகு சிலர் மாத்திரமே பிதாவோடு ஒரு நெருங்கிய, தனிப்பட்ட உறவை அனுபவித்தனர். ஏனோக்கு, இவ்விசேஷித்த மனிதர்களில் ஒருவராவார். குறைந்தபட்சம் முன்னூறு ஆண்டுகள் (ஆதி. 5:22), அவர் தேவனோடே சஞ்சரித்துக் கொண்டிருந்தார் - தோட்டத்தில் சரீரப்பிரகாரமாக ஆதாம் சஞ்சரித்தது போல் அன்றி, ஆவிக்குரிய தோழமையில் இவர் சஞ்சரித்தார். தேவனோடு அன்றாடம் நெருங்கிய உறவுடன் வாழ்ந்த அநேகர் (சாமுவேல், யோசேப்பு, தாவீது, மற்றும் தானியேல் போன்றவர்கள்) இரு சாராருக்கும் நிறைவு கிடைக்கும் வண்ணம் வாழ்ந்தனர்.

பழைய உடன்படிக்கையின் கீழ், ஆவிகளுடைய தகப்பனோடு தோழமை அனுபவிப்பது சாத்தியமாய் இருந்த போதிலும், பொதுவாக அது நிலவியதில்லை. இருப்பினும், இருதயத்தில் எழுதும் உடன்படிக்கையின் கீழ் கிறிஸ்தவர்கள் அனைவரும், "நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனங்களாயிருப்பார்கள்" (2 கொரி. 6:16ஆ) என்ற உணர்வுடன் வாழ்வார்கள் என்று பிதாவானவர் கூறினார்.

தேவன் தமக்கும், தமக்குக் கீழ்ப்படிகிற ஆவிக்குமிடைய இருக்க வேண்டும் என்று விரும்பிய நெருக்கமானது இயேசுவின் ஜெப வார்த்தைகளில் காணப்படுகிறது: "நீர் எப்பொழுதும் எனக்குச் செவி கொடுக்கிறீர்" (யோவா. 11:42). நன்கறிந்த கிறிஸ்தவர் ஒருவர், தேவனுடைய பிரசன்னத்தைப் புலன்களால் அல்ல மாறாக விசுவாசத்தினாலே தேவன் தம்முடன் நெருங்கியிருப்பதை உணர முடியும் என்று அறிவார்: "கர்த்தர் சமீபமாயிருக்கிறார்" (பிலி. 4:5ஆ). இந்த நிச்சயமானது அவருக்கு தன்னம்பிக்கையையும், உள்ளான மகிழ்ச்சியையும், எல்லாப் புத்திக்கும் மேலான சமாதானத்தையும் தருகிறது (பிலி. 4:6, 7). மற்ற ஜனங்களிடத்தில் இல்லாத வகையில் கீழ்ப்படிதலுள்ள கிறிஸ்தவர்கள், தேவன் அவர்களுக்குள் வாசம் செய்வதை உணருகின்றனர் (யோவா. 14:23). பிதாவானவர் தங்களை அவருக்குரியவர்கள் என்று விசேஷித்த வகையில் "அவருக்குச் சொந்தமான ஜனங்கள்" (1 பேது. 2:9) என்று நோக்குவதை அவர்கள் அறிவார்கள். இயேசு அவர்களின் சகோதரர் என்று அழைக்கப்பட வெட்கப்படவில்லை என்றும் அவர்கள் அறிவார்கள் (எபி. 2:11). மேலும், "நான் அவர்களுக்

குள்ளே வாசம் பண்ணி, அவர்களுக்குள்ளே உலாவி, அவர்கள் தேவனாயிருப்பேன்; அவர்கள் என் ஜனங்களாயிருப்பார்கள்" (2 கொரி. 6:16; வெளி. 21:7ல் காண்க) என்று பிதாவானவர் கூறியிருப்பதால், அவர் தம்மைப் பிதா என்று அழைக்கப் படுவதில் வெட்கப்படாதிருக்கிறார் என்றும் அவர்கள் அறிவார்கள்.

மற்ற எவரையும் காட்டிலும், பிதாவை நன்கு அறிந்த இயேசு, விசுவாசமுள்ள மனிதர்களுக்கு, "உங்கள் தலையி லுள்ள மயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது" (மத். 10:30) என்று உறுதியளித்திருக்கிறார். சில மக்களைப் பொறுத்த வகை யில் அவர் அதிகம் எண்ண வேண்டியிருக்காது என்று சிலர் வேடிக்கை செய்வதுண்டு, ஆனால் இயேசுவின் இந்தக் கூற்று, தேவனுக்கும் அவரது மக்களுக்கும் இடையே நிலவுகின்ற நெருக்கம், தோழமை மற்றும் அக்கறை இவற்றைக் காட்டுகிறது என்று நாம் அனைவரும் தெளிவாகப் புரிந்து கொண்டுள்ளோம்.

## கர்த்தரை அறிந்தவர்கள்

புதிய உடன்படிக்கையில் ஒவ்வொருவரும் கர்த்தரை அறிந்து கொள்ளுவார்கள் என்பதே மூன்றாவது வித்தியாசம் ஆகும்.

*சாமுவேல்.* பழைய உடன்படிக்கையின் கீழ், ஒரு குழந்தை பிறக்கும்பொழுதே தேவனுடைய ஜனங்களில் ஒன்றா யிருந்தது. எடுத்துக்காட்டாக, உடன்படிக்கையின் ஜனங்களா யிருந்த எபிரெயப் பெற்றோருக்கு சாமுவேல் பிறந்தார். அவர் கர்த்தரை அறியாதிருந்தாலும் கூட அவருடைய எபிரெயப் பிறப்பு தானாகவே அவரை மோசேயின் உடன்படிக்கையின் ஒரு பங்காக ஆக்கிவிடச் செய்தது. அவர் சிறு பிராயத்தில், ஏலியின் பராமரிப்பில் ஆலயத்தில் விடப்பட்டபோது, அவருக்குக் கர்த்தரைப்பற்றிப் போதிக்க வேண்டியதாயிற்று. பிள்ளைகள் அங்கத்தினராவது பழைய உடன்படிக்கையின் மாதிரியாகும். ஆனால் புதிய உடன்படிக்கையின் கீழ் அப்படியிருக்காது என்பதைத் தேவன் குறிப்பாகக் கூறியுள் ளார்: "அப்பொழுது சிறியவன் முதற்கொண்டு பெரியவன் வரைக்கும் எல்லாரும் என்னை அறிவார்கள்" (எபி. 8:11ஆ).

*பெந்தெகொஸ்தே நாளன்று இருந்தவர்கள்.* இதற்கு முற்றிலும் மாறுபாடான முறையில், புதிய உடன்படிக்கை ஆரம்பமானபோது என்ன நடந்ததென்று கவனியுங்கள்:

“அவனுடைய வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள்” (அப். 2:41), ஆனால் அவர்களுடைய பச்சிளம் குழந்தைகள் அதைப் பெறவில்லை. இயேசு கிறிஸ்துவைக் கர்த்தரென்று அறிந்தவர்கள் மாத்திரமே புதிய உடன்படிக்கையில் அனுமதிக்கப்பட்டனர் (அப். 2:36).

*பிலிப்பி பட்டணத்தின் சிறையதிகாரி.* ஒருவர், பிலிப்பி பட்டணத்தின் சிறையதிகாரியும், அவரது வீட்டார் அனைவரும் ஞானஸ்நானம் பெற்றனர் என்பதை வாசிக்கிறார். அந்த வீட்டாரில் சிறுகுழந்தைகளும் இருந்திருப்பார்களேயானால், கர்த்தரால் குறிப்பிடப்பட்டுள்ள பழைய மற்றும் புதிய உடன்படிக்கைகளுக்கிடையேயான மூன்றாவது வேறுபாடு உண்மையற்றதாகிவிடும், ஏனெனில் கர்த்தர் யார் என்பதைச் சிறுகுழந்தைகள் அறியார்கள். சிறையதிகாரியின் வீட்டார் அனைவரும் பிரசங்கத்தைக் கேட்டார்கள் என்றும் (அப். 16:32) அதன் பிறகு அவர்கள் ஞானஸ்நானத்தின்மூலம் புதிய உடன்படிக்கையின் பங்காளிகளாகி, கர்த்தரில் விசுவாசம் கொண்டனர் என்றும் நாம் வாசிக்கிறோம்.

*தொகுப்பு இயல் அல்ல.* புதிய உடன்படிக்கையானது நாடளாவிய அல்லது குடும்பமளாவிய உடன்படிக்கை கூட அல்ல என்பதைத் தேவன் தெளிவாக்கியுள்ளார். மாறாக அது மிகத்தெளிவாக தனிப்பட்ட முறையில், சொந்த விருப்பத்தினடிப்படையில் ஒரு பாவிக்கும் அவரது இரட்சகருக்கும் ஏற்படும் ஒப்பந்தம் ஆகும். கிறிஸ்தவம் என்பது ஆவிக்குரிய தொகுப்பியல் அல்ல.

## முழுமையான மன்னிப்பு

பாவங்கள் முழுமையாக மன்னிக்கப்படுதல் என்பது புதிய ஏற்பாட்டின் கீழ் அனுபவிக்கிற புதியவைகளில் நான்காவது பகுதியாகும்: “நான் அவர்கள் அக்கிரமத்தை மன்னித்து, அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பேன்” (எரே. 31:34இ; மற்றும் எபி. 8:12; 10:17 இவைகளையும் காண்க).

### சிலுவைக்கு முந்திய நாட்களில் நடக்கவியலாதிருந்தமை

இயேசு சிலுவையில் மரிப்பதற்கு முன்பு, முழுமையான பாவமன்னிப்பென்பது நடக்க முடியாத ஒரு செயலாயிருந்தது.

*‘‘இரத்தஞ்சிந்துதலில்லாமல் மன்னிப்பு உண்டாகாது’’ (எபி. 9:22) என்பதால் இது உண்மையே: ‘‘காளை வெள்ளாட்டுக்கடா இவைகளுடைய இரத்தம் பாவங்களை நிவர்த்தி செய்ய மாட்டாதே’’ (எபி. 10:4). நீதிமானாகிய ஆபேல் (மத். 23:35) போன்ற விசுவாசமுள்ள மக்களின் பாவங்கள் பற்றியெல்லாம் அக்கறைப்பட வேண்டிய அவசியம் இருந்தது, எனவே இயேசு வந்து தமது இரத்தத்தைச் சிந்துவார் என்று தேவன் அறிந்திருந்தார். இருப்பினும், ஆபேலின் ஆட்டுக் குட்டியானது குற்றத்தை அழிக்கவில்லை; அது “உலகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கிற” (யோவா. 1:29). தேவ ஆட்டுக் குட்டியைச் சுட்டிக்காண்பிக்க மட்டுமே முடிந்தது.*

*நியாயப்பிரமாணத்தில் மன்னிப்பு தரப்படாத பாவங்களாகிய கொலை, விபச்சாரம் ஆகியவற்றை தாவீது செய்தபோது கர்த்தர் அவர் பாவங்களை நீங்கச் செய்ததாக நாத்தான் கூறினார் (2 சாமு. 12:13). ஆனாலும் இயேசு மரணமடையும் வரை மன்னிப்பு என்பது நிறைவடையாமலிருந்தது.*

*யோவானிடம் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டவர்களுக்கு, பாவமன்னிப்பிற்கான அவர் கொடுத்த வாக்குத்தத்தத்திற்கும் இது உண்மையானது (மாற். 1:4). அவர்கள் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டபோது அவர்களின் பாவங்கள் நீங்கினது உண்மையென்றாலும் கூட, இரட்சகரின் இரத்தம் சிந்தப்படாதவரையில் அவை முற்றிலும் நீங்காமலிருந்தது.*

***சிலுவைக்குப் பிந்திய நாட்களின் உண்மை நிலை***

*பெந்தெகொஸ்தே நாள் வரையிலும், வருஷந்தோறும் பாவங்களின் நினைவு கூறுதல் உண்டாயிருந்தது (எபி. 10:3). தம்முடைய நீதியின் தன்மையில் தேவன் அவைகளை மறக்காமல் இருந்தார், எனினும், எரேமியாவின் வழியாக அவர் புதிய உடன்படிக்கை அமுலுக்கு வரும்போது, உடனடியாக, முழுமையான பாவமன்னிப்பு நடைமுறைக்கு வரும் என்று கூறினார். ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுகையில், கடந்த காலத்தைப் பொறுத்தமட்டில் அவர் முழுமையடைகிறார் என்ற நிச்சயம் பெறுகிறார் (எபி. 10:14). பொய்யுரையாதவர் ஒருவர், அவருடைய பாவங்களை இனிமேல் நினைவு கூறுவதில்லை என்று வாக்குத்தத்தம் செய்ததால் அதினிமித்தம் இவர் களிகூருகிறார். நியாயத்தீர்ப்பின் நாளிலே இவர் தாம்*

ஞானஸ்நானம் பெறுமுன்பு செய்த பாவங்களுக்குக் கணக்கொப்புவிக்கத் தேவையில்லை.

ஞானஸ்நானத்திற்குப் பிறகு கிறிஸ்தவர் செய்கின்ற செயல்கள் புதிய உடன்படிக்கையின் ஒழுங்கு முறைப்படி மதிப்பிடப்படவேண்டும், ஆனால் கடந்தது எதுவோ அது கடந்ததுதான். பாலத்தினடியில் கடந்து போன நீரை ஒருவர் மறுபடியும் திரும்பிக் கொண்டுவர முடியாதது போலவே கடந்ததை மறுபடியும் கொண்டுவர முடியாது. ஞானஸ் நானத்திற்கு முன்பு ஒருவருடைய பாவம் இரத்தாம்பரம் போலச் சிகப்பாயிருந்தாலும், அவர் ஞானஸ்நானம் பெற்று கிறிஸ்தவராகின்றபோது வெள்ளைக்கம்பளம் போன்றும், பனிபோன்றும் வெண்மையாகிறதை கிறிஸ்தவர் ஒருவர் அகமகிழ்வுடன் கொண்டாட முடியும் (ஏசா. 1:18). அவர் பாவம் ஒன்றும் செய்யாதவர் போலவே தேவனால் மதிப்பிடப் படுகிறார். இரண்டு உடன்படிக்கைகளுக்குமிடையே உள்ள நான்காவது வித்தியாசம், நான்காவது புதிய தன்மையின் பகுதியானது ஒரு பாவியின் ஆத்துமாவிற்கு பரிசுத்தத்தையும், நிச்சயத்தையும், சந்தோஷத்தையும், மகிமையையும், ஐசுவரியங்களையும் கொண்டு வருகின்றது.

## முடிவுரை

ஒவ்வொரு கிறிஸ்தவரும் தேவன் தம்முடன் ஏற்படுத்திய புதிய உடன்படிக்கையில் களிகூறுவோம். பழைய உடன் படிக்கையின் காலம் கடந்து விட்டது, அது சிலுவையிலறையப் பட்டுவிட்டது. தேவனுடைய இறுதியான உயிலும் இயேசுவின் ஏற்பாடுமாகிய இதன் மூலம் ஆசீர்வாதத்தின் நாட்களும், தேவனோடு தோழமையும் இப்பொழுது வந்துள்ளன.

---

**குறிப்புகள்**

[1]சில உண்மையான கிறிஸ்தவர்களும் கூட, தீமைக்குள்ளாக்கும், புரட்டப்பட்ட, இருதயமற்ற, மாய்மால சட்டங்களாலான நவீன உதாரணங் களைக் கண்டு (மத். 15:8ஐக் காண்க) பவுல் எழுதிய சில வாக்கியங்களை தவறாக அர்த்தம் செய்து கொண்டு (ரோமர் 6:14ல் போல, ஆனால் ரோமர் 3:27; 8:1ஐக்

*காணவும்) கிறிஸ்தவத்தில் எல்லா சட்டங்களும் தவிர்க்கப்பட்டதாக பவுல் எழுதிய சில வசனங்களை (ரோமர் 6:14; 3:24; 8:1) தவறாகப் புரிந்து கொள்கின்றனர். இக்கண்ணோட்டமானது, "சட்டரீதியான" எதையும் அவர்கள் வெளிப்படையாக நிராகரிக்கச் செய்கிறது. இவ்வாறு செய்வதன் மூலம், இருதயப் பூர்வமாக தேவனுடைய சட்டத்திற்குக் கீழ்ப்படியும் ஒரு நீதிமான் இருக்க முடியும் என்று அவர்கள் காண முடியாமல் இருக்கின்றார்கள் என்பதே சட்டத்தின் உச்சமான அறிவாயிருக்கிறது (2 தீமோ. 2:5). "பிரமாணம்" (தோரா) என்ற வார்த்தையை பழையதிலிருந்து புதியதிற்குக் கொண்டு செல்லப் பயன்படுத்துகின்றன. முதலாம் உடன்படிக்கைக்கு மாறாக இரண்டாம் உடன்படிக்கையில் நான்கு தெளிவான புதியவைகள் இருக்கின்றன. இருப்பினும், இப்புதியவைகளின் பகுதிகளில் ஒன்றாக சட்டம் இல்லாமை என்று ஒன்றில்லை. சட்டரீதியானவை இரண்டிலும் மகாமேன்மையான வகையில் காணப்படுகின்றன. (கலா. 6:2; 1 கொரி. 9:21; யாக். 1:25; 1 யோவா. 3:4; எபி. 8:10 ஆகியவைகளைக் காணவும்.)*